
பெயர்: ______________ **மொழிப்பயிற்சி** வகுப்பு: 4

## எறும்பும், வெட்டுக்கிளியும்!





அது, வசந்த காலத்தின் செழுமைக் காலம். தானியங்களும் உணவுப் பொருட்களும் நிறைந்து கிடந்தன. எறும்புகள் அவசர அவசரமாக உணவு துகள்களையும், தானிய விதைகளையும் இழுத்துக் கொண்டு தங்கள் புற்றுக்குள் செல்வதும், வருவதுமாய் இருந்தன. அதைக் கண்ட வெட்டுக்கிளி ஒன்று கேலியாய்ப் பாடி நகைத்தது.

"அட முட்டாள்களே, இப்பொழுதே ஏன் கஷ்டப்படுகிறீர்கள்." என்றபடி தாவியது. காலம் ஓடியது, மழைக்காலம் வந்து சென்றது. குளிர்காலமும் வந்தது. எங்கும் ஒரே பனி. வெட்டுக்கிளிக்கு எங்கும் உணவே கிடைக்கவில்லை . கடும் பசியுடன் அது எறும்புப் புற்றின் கதவைத் தட்டியது. வெளியே வந்த எறும்பு "ஏ சோம்பேறியே! வசந்த காலத்தில் சேமிக்க மறந்த உனக்கு உதவுவது பெரும் தவறு.போ, போய் விடு!" என்று கூறி விட்டுக் கதவை மூடிக் கொண்டது. சோம்பேறி வெட்டுக்கிளி உணவு கிடைக்காமல் அலைந்தது.

1. கதையில் இடம்பெற்ற பூச்சிகள் யாவை?

அ) வெட்டுக்கிளி, எறும்பு ஆ) பல்லி, எறும்பு இ) தேனீ, எறும்பு

2. எந்தக் காலத்தில் தானியங்கள் உணவுப் பொருட்கள் நிறைந்து கிடந்தன?

அ) கோடைக் காலம் ஆ) வசந்தக் காலம் இ) மழைக்காலம்

3. உணவு துகள்களையும், தானிய விதைகளையும் இழுத்துச் சென்றவை எவை?

அ) வெட்டுக்கிளிகள் ஆ) தேனீக்கள் இ) எறும்புகள்

4. யார் உணவு சேமிக்க மறந்த சோம்பேறியாக இருந்தது?

அ) வெட்டுக்கிளிகள் ஆ) வண்டுகள் இ) எறும்புகள்

5. இக்கதை உணர்த்தும் நற்பழக்கம் யாது?

அ) உதவி செய்தல் ஆ) சேமிப்பு இ) பிறரை மதித்தல்

LIVEWORKSHEETS